செயற்பொறியாளர்.பொபது., நீர்வள ஆதார அமைப்பு, நிலநீர்கோட்டம், கடலூர்-1
அவர்களின் நடவடிக்கைகள்

செ.மு.எண்.312/நிஉ (II)/2021/நாள்: 06.09.2021

முன்னிலை: பொறி.தீ.தமிழ்ச்செல்வி, எம்.இ.,
செயற்பொறியாளர், பொபது.,

******

பொருள் : நியமனம் (நேரடி) – த.நா.அ.ப.தொகுதி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட 2018-2019 மற்றும் 2019-2020-ம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வு தொகுதி IV-ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கு பணி வேட்பாளர்களை தெரிவு செய்து பொதுப்பணித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது – பணி நியமன ஆணை வழங்கப்பட்டது – பணியில் சேர்ந்து பணிபுரிகிறார்கள் - இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்தும் தகுதிகாண்பருவத்தினை துவக்கி – ஆணை வழங்குதல் - சார்பாக.

பார்வை :1 செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-3 அவர்களின் கடித.எண்.2496/PSD-I/2020/நாள்:29.05.2020

2 முதன்மை தலைமைப்பொறியாளர், நீஆது., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொபது., சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் செ.மு.ஆ.எண்.எஸ்3(3)/35935/2020/ நாள்:17.09.2020.

3 இவ்வலுவலக செ.மு.ஆணை எண்.309/நிஉ II/ 2020/ நாள்:23.09.2020

******

பார்வை-1-ல் காணும் செயலாளர் (TNPSC) கடிதம் பார்வை-2ல் காணும் முதன்மை தலைமைப் பொறியாளர், நீஆது., மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) பொபது., சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணை மற்றும் பார்வை-3-ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணைகளின்படி, இக்கோட்டம் மற்றும் உபகோட்டங்களுக்கு இளநிலை உதவியாளர்கள் பதவிக்கு பணியமர்வு செய்யப்பட்டவர்கள். கீழே குறிப்பிட்டுள்ள தினங்களில் இக்கோட்டம் மற்றும் உபகோட்டத்தில் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்கள்.

2) தமிழ்நாடு அரசுப்பணியாளர் மற்றும் சார்நிலைபணிகள் விதி 23(அ)(i)-ன் படி கீழ்காணும் இளநிலை உதவியாளர்கள் அவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் கலம் 7ல் உள்ளபடி பணிவரன்முறை செய்தும், இவர்களது தகுதிகாண் பருவத்தை மூன்றாண்டு தொடர் பணிகாலத்தில் இரண்டாண்டு காலத்தை இவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் துவக்கியும் இதன் மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

மேலும் இவர்கள் தகுதிகாண்பருவகாலத்திற்குள் பவானிசாகர் பயிற்சியை நிறைவு செய்யப்பட வேண்டும் மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை தேர்வும் தேர்ச்சி பெறவேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. பார்வை-2ல் காணும் முதன்மை தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களின் ஆணையில் குறிப்பிட்டுள்ளபடி சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை கிளை மற்றும் மதுரைக் கிளையில், ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வு தொகுதி IVயின் தொடர்பாக கொடுக்கப்பட்ட வழக்குகளில் வழங்கப்படவுள்ள தீர்ப்புக்குட்பட்டது என்ற நிபந்தனையுடன் இவ்வாணை வழங்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் பதவி | பிறந்த தேதி | தேர்வாணைய கடித வ.எண். | பணியில் சேர்ந்த அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | R.திவ்யா இளநிலை உதவியாளர் | 10.03.1996 | 60 | செயற்பொறியாளர், நீஆது., நிலநீர் கோட்டம், கடலூர். | 23.09.2020 மு.ப. | 23.09.2020 மு.ப. |
| 2. | E.இந்திரா இளநிலை உதவியாளர் | 08.01.1982 | 108 | உதவி செயற்பொறியாளர், நீஆது., நிலநீர் உபகோட்டம், விழுப்புரம். | 23.09.2020 மு.ப. | 23.09.2020 மு.ப. |

செயற்பொறியாளர், பொபது.,
நிலநீர் கோட்டம், கடலூர்

6-10-21 6/10/2021

பெறுநர்:
1. செல்வி.R.திவ்யா, இ.நி.உ.,
நிலநீர் கோட்டம், கடலூர்.
2. திருமதி.E.இந்திரா, இ.நி.உ.,
நிலநீர் உபகோட்டம், விழுப்புரம்.
வழி:உதவி செயற்பொறியாளர், நிலநீர் உபகோட்டம், விழுப்புரம்.

நகல் : கோப்புக்கு